
Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Justiz- und Polizeidepartement EJPD
**Staatssekretariat für Migration SEM**




# சமூக காப்புறுதிகள்: சுவிட்சர்லாந்து நாட்டில் வசித்தலும் வெளியேறுதலும்

வெளிநாட்டு மக்களிற்கான தகவல் அறிவுரைகள்

# உள்ளடக்கம்


**A சமூகக் காப்புறுதிகள் குறித்த முக்கிய தகவல்கள் 4**

**1.** சுவிட்சலாந்து நாட்டிற்குரிய வயோதிபகால ஓய்வு நிதி, தாரமிழந்தவர்க்கான நிதி, வலது குறைந்தவர்களுக்கான நிதி எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது? 5

**2.** வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான காப்புறுதி நிதியில் (AHV/IV–AVS/AI) எவை முக்கியமானவை? 6

**3.** தொழில் ஓய்வூதிய காப்புறுதியின் முக்கியத்துவம் 8

**4.** நான் என்னுடைய தற்போதைய தொழிலினை விட்டு, வேறு தொழில் மாறுவதாக இருந்தால் என்ன செய்ய வேண்டும் 9

**5.** நான் தொழிலை விட்டு நீங்கி, நிரந்தரமாக ஓய்வூதியம் (பென்சன் எடுக்காது) பெற்றுக் கொள்ளாமல் சுவிற்சலாந்தில் வசிப்பதாயின் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்? 10

**6.** எந்த வகையான பத்திரங்களையும், தகவல் அத்தாட்சிகளையும் நான் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் 10

**B சுவிட்சலாந்து நாட்டை விட்டு நிரந்தரமாக குடிபெயர்வதாக இருந்தால், நான் முன்கூட்டியே என்ன ஆயத்தங்களை செய்ய வேண்டும், அத்துடன்எனக்கு என்ன உரிமைகள் உள்ளன? 12**

**7.** வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி AHV/IV 13

**7a.** சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை ஒன்றில் இணைந்து செயற்படுகின்றது 13

**7b.** சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் 15

**8.** தொழில் ஓய்வூதிய இரண்டாவது காப்புறுதி நிதி 17

**8a.** எனது தொழில் ஓய்வூதிய காப்புறுதி சேமிப்பினை எனது கையில் கிடைக்க எவ்வாறு நான் விண்ணப்பம் செய்ய முடியும்? 17

**8b.** நான் சுவிட்சலாந்து நாட்டை விட்டு நிரந்தரமாக குடிபெயர்ந்த பின்பு, தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதியில் இருந்து பணம் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் 18

**8c.** நான் எனது முழு சேமிப்பினை, கவனிக்காது விட்டு வைத்தால் அதற்கு என்ன நடைபெறலாம்? 19

**9.** விபத்து காப்புறுதி நிதி கிடைத்தல் 19

**C சுவிட்சலாந்து நாட்டில் நான் வசிக்காமல் இருந்தால், எனக்கு என்ன உரிமைகள் உள்ளன? 20**

**10.** வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, காப்புறுதி நிதியில் (AHV/IV–AVS/AI) உள்ள எனது உரிமை 21

**11.** தொழில் ஓய்வு காப்புறுதி பென்சியோன் நிதியில் உள்ள எனது உரிமை 23

**D இணைப்பு 24**

முக்கியமான முகவரிகள் 25

சுவிசை விட்டு வெளியேறும் போதும் அதன் பின்பும் பெற இயலுமான உரிமைகள் 26

விபரமான விளக்கம் 28

# வழிகாட்டுதல்கள்

## இந்த அறிவுரைக் கையேட்டின் நோக்கம் என்ன?

இக் கையேடு சுவிட்சர்லாந்து நாட்டில் நடைமுறையிலுள்ள, சமூக காப்புறுதிகளான வயோதிபகால ஓய்வு நிதி தாரமிழர்ந்தவர்க்கான நிதி வலது குறைந்ததவர்க்கான நிதி (AHV/IV–AVS/AI) தொழில் ஓய்வூதிய நிதி சம்பந்தமான அடிப்படை சட்ட நிர்வாகங்களினைப் பற்றி எடுத்துரைக்கின்றது. அத்துடன் சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேற முடிபு எடுக்கும் தருணங்களில், எப்படியான ஒழுங்கு முறையில் நீங்கள் உங்களைத் தயார் செய்ய வேண்டும் என்பதினையும் இலகுவாக விளக்கப்படுத்தி வழிகாட்டுகின்றது.

## யாருக்காக இந்தக் கையேடு வெளியிடப்படுகின்றது?

இந்த கையேடு சுவிட்சர்லாந்து நாட்டில் வசிக்கும் வெளிநாட்டினருக்கு அல்லது வசித்தவர்களிற்கு, அத்துடன் அல்லது இங்கே தொழில் செய்பவர்களிற்கு அல்லது தொழில் செய்தவர்களிற்காகத் தயார் செய்யப்பட்டது:

- வருடாந்த அனுமதிப்பத்திரம் (Ausweis B – permis B)
- நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் (Ausweis C – permis C)
- அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்கள் (Ausweis N – permis N),
- தற்காலிகமாக வதிவிட அனுமதி பெற்றவர்கள் (Ausweis F – permis F)
- அல்லது பாதுகாப்பு அவசியமாக தேவையானவர்கள் (Ausweis S – permis S)
- அரசியல் தஞ்ச அங்கீகாரம் பெற்றவர்கள் அல்லது நாடற்றவர்கள்
- சரியான வதிவிட அனுமதியற்றவர்கள் ஆனால் வேலைசெய்பவர்கள்.

## இக் கையேடு கீழ்கண்ட நபர்களிற்கு செல்லுபடியாகாது:


- ஐரோப்பிய கூட்டரசு நாட்டவர்களிற்கும், ஐரோப்பிய வர்த்தக[1] மற்றும்
- வலய (EFTA) நாட்டவர்களிற்கும் அத்துடன் அரசியல் தஞ்ச அங்கீகாரம் பெற்றவர்கள் அல்லது நாடற்றவர்கள், ஏதாவது ஒரு ஐரோப்பிய கூட்டரசு (EU) நாட்டிற்கு அல்லது ஐரோப்பிய வர்த்தக வலய (EFTA) நாட்டிற்கு குடியேறிச் செல்வதாயின்.2

தெளிவாக சொல்லும் பட்சத்தில் இக் கையேட்டின் மூலம் ஒவ்வொரு நபர்க்கும் தனிப்பட்ட ரீதியில் சொந்த ஆலோசனையை வழங்க முடியாது, ஏனெனில் இங்கே பொதுவாக இலகுவான உள்ளடக்கமே கூறப்பட்டுள்ளது. விசேடமான கேள்விகளிற்கு உரிய அறிவுரை படிவங்களினை, வயோதிப ஓய்வூதிய நிதிநிலையத்திடமிருந்து அல்லது இணையத்தளம் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். அத்துடன் ஆலோசனை வழங்கும் தாபனங்கள் ஊடாகவும் தெளிவான ஆலோசனையை அறிந்து கொள்ளலாம். இதற்கான முகவரிகளை இந்தக் கையேட்டின் 25வது பக்கத்தில் காணலாம்.

1 *ஐரோப்பிய கூட்டரசு நாட்டவர்களிற்கும், ஐரோப்பிய வர்த்தக வலய நாட்டவர்களிற்கும் என தனியாக கட்டமைப்பு உடன்படிக்கைகள், இந் நாடுகளுடன் சேர்ந்து நபர்கள் சுதந்திரமாகப் பயணம் செய்வதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நாடுகளுக்கும் இது செல்லுபடியாகும்.. ஒப்பிடுக, பிரசுர இல. 880 "சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து வெளியேறுவோருக்கு" (இணையத்தளத்தில் www.ahv-iv.ch ▸ Merkblätter/ International)*

2 *ஒப்பிடுக. அடிக்குறிப்பு இலக்கம் 1.*

# A சமூகக் காப்புறுதிகள் குறித்த முக்கிய தகவல்கள்



## 1. சுவிட்சர்லாந்து நாட்டிற்குரிய வயோதிபகால ஓய்வு நிதி, தாரமிழந்தவர்க்கான நிதி, வலது குறைந்தவர்க்கான நிதி (AHV/IV) எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது?

I

II

சுவிட்சர்லாந்தின் நாட்டிற்குரிய வயோதிபகால ஓய்வுநிதி, தாரமிழந்தவர்க்கான நிதி வலது குறைந்தவர்க்கான நிதி என இரண்டு வகையான காப்புறுதிப் பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளன:

- வயோதிபகால ஓய்வு நிதி **(AHV/IV–AVS/AI)** ஒரு அத்தியாவசிய முதலாம் தூண் எனப்படும் அடிப்படைக் காப்புறுதி. இக்காப்புறுதி சுவிட்சர்லாந்து நாட்டில் வசிப்பவர்களிற்கும், இங்கே தொழில் செய்பவர்களிற்கும் செல்லுபடியாகும்.
- தொழில் ஓய்வூதிய நிதி தொழில் வழங்கும் தாபனங்கள் மூலமாக இயங்குகின்ற இரண்டாம் தூண் எனப்படும் காப்புறுதியாகும். இக்காப்புறுதி சுவிட்சர்லாந்தில் வேலை செய்கின்ற வருடாந்தம் ஆகக்குறைந்து 21,150 பிறாங்குகள் (01.01.2018 நிலைப்பாட்டின்படி) வருடாந்த சம்பளம் பெறுபவர்களுக்கு அத்தியாவசியமாக்கப்பட்டுள்ள ஒரு காப்புறுதியாகும்.

நீங்கள் இரண்டு சமூக காப்புறுதியிலும் ஒரே நேரத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருப்பது மிகவும் சாதாரணமாக அமையலாம். அப்படியாயின் இரண்டு காப்புறுதியிடமிருந்தும் நீங்கள் காப்புறுதி வருமதியினை குறிப்பிட்டகாலத்தில் எதிர்பார்க்கலாம்.

வயோதிப ஓய்வு நிதியும், தொழில் ஓய்வூதிய நிதிக்குமான காப்புறுதியினை அனைவரும் கட்டாயமாக ஆரம்பிக்க வேண்டும். இதனால் கீழ் சொல்லப்பட்ட தற்பாதுகாப்பு செயற்பாடுகளைப் பெறலாம்.

- வேலை செய்யும் காலத்திற்கான வயது முடிவடைந்த பின்பு கிடைக்கும் வயோதிப ஓய்வு நிதி,
- உடலியல் ரீதியாக தொழில் செய்ய முடியாவிடின் கிடைக்கப்பெறும் வலது குறைந்தவர்க்கான நிதி,
- கணவன் அல்லது மனைவி அல்லது பெற்றோர்கள் மரணமானால் காலமானவரின் குடும்பத்தினர்களிற்கான அதாவது பின்தங்கியிருப்பவர்களின் காப்புறுதி ஓய்வு நிதி.

வயோதிபகால, தாரமிழந்த, வலதுகுறைந்தவர்க்கான (AHV/IV–AVS/AI) ஓய்வு நிதியும், தொழில் ஓய்வூதிய நிதிக்குமான காப்புறுதியும் வேறுபாடுகள் உடைய கொள்கைகளுடன் தனித்தனியாக இயங்குகின்ற நிலையங்களாகும்.

- வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதி (AHV/IV–AVS/AI) தாபனம் ஓய்வூதிய நிதி நிலையத்தின் மூலமாக இயங்குகின்றது.
- தொழில் ஓய்வூதிய நிதிக்கான காப்புறுதிகள், பல முற்பாதுகாப்பு சேமிப்பு நிதிநிலையம் மூலமாகவும் (உதாரணத்திற்கு தொழில் ஓய்வூதிய தாபனங்கள்) வேறுபட்ட நடைமுறைகளினையும், கொள்கைகளினையும் அடிப்படைகளின் கீழ் இயங்குகின்றன. அனைத்து வேலை வழங்கும் தாபனங்களும், சுயவிருப்பில் காப்புறுதி செய்த நபர்கள் தொழில்புரியும்போது, கட்டாயமாக ஏதாவது ஒரு பதிவு செய்யப்பட்ட தொழில் ஓய்வூதிய நிதிக்கான காப்புறுதி தாபனங்கள் ஒன்றில் இணைந்து இருக்க வேண்டும்.

## 2. வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான காப்புறுதி நிதியில் (AHV/IV–AVS/AI) மிக முக்கியமானவை

I

### என்னை இவ்வாறு காப்புறுதி செய்வதின் மூலம் எனக்கு என்ன நன்மை?

வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான நிதியில் (AHV/IV–AVS/AI) காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நேரத்தில் நீங்கள் பலவிதமான கடமைகளிற்கும், ஒழுங்குகளிற்கும் கீழ்ப்பட்டு இயங்க வேண்டியவராக உள்ளர்கள். இவற்றில் மிக முக்கியமானது, ஒழுங்காக அதற்குரிய மாதாந்த கட்டணப்பணம் செலுத்தப்படல் வேண்டும். அதற்கு பதிலாக உங்களிற்கு பிற்காலத்தில் வருமதி கிடைக்கும் (உதாரணத்திற்கு பென்சன் காசு), நீங்கள் தொழிலினை விட்டு ஓய்வூதியம் பெறுதலின் போது அல்லது விபத்தினால் அங்கவீனம் ஏற்பட்டால் நீங்கள் மரணமானால் உங்கள் மிகுதியாக உயிர் வாழும் குடும்ப அங்கத்தினவர்களிற்கு பின்தங்கியிருப்பவர்கள் நிதி வழங்கப்படும்.

### எந்த நேரத்தில் இருந்து எனக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது?

சுவிட்சர்லாந்து நாட்டில் வசிப்பவர்களும் அல்லது இங்கே தொழில் செய்பவர்கள் அனைவரும், பிள்ளைகள் உட்பட காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
நீங்கள் உங்களைக் காப்புறுதி செய்த பின்பு, உங்களிற்கென ஒரு வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான (AHV–AVS) காப்புறுதி இலக்கம் வழங்கப்படும். இந்த இலக்கத்தினை நீங்கள் ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு எழுதும் அனைத்து கடிதங்களிலும் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும். இந்த இலக்கத்தை நீங்கள் உங்கள் மருத்துவக் காப்புறுதி அட்டையிலும் காணலாம்.

### என்ன விதமாக நான் காப்புறுதி நிதிக்கான கட்டணத்தினை செலுத்துவது?

நீங்கள் எவ்வளவு காலம் தொழில் செய்கின்றீர்களோ அதுவரை காப்புறுதிக் கட்டணத்தினை செலுத்த வேண்டும். இதற்குப் பங்களிப்புச் செலுத்த வேண்டிய கடமை 17வயது நிறைவடைந்த பின்பாக வரும் தை 1 லிருந்து ஆரம்பமாகும். தொழில் செய்யாத நபர்கள் உங்களின் 20 வயது முடிவடைந்த பிற்பாடு வருகின்ற 01 ம் திகதி தை மாதம் ஆரம்பத்தில் இருந்து வழமையான ஓய்வூதிய வயது வரும்வரை (பெண்கள் 64 வயது, ஆண்கள் 65வயது) காப்புறுதி கட்டணத்தினைச் செலுத்த வேண்டும்.

### நீங்கள் ஏதாவது தாபனம் ஒன்றில் வேலை செய்பவராயின், தொழில் வழங்கும் தாபனமும்

நீங்களுமாக பகிர்ந்து காப்புறுதி கட்டணத்தினை செலுத்த வேண்டும். வேலை தருபவர்கள் அரைவாசி கட்டணத்தினை செலுத்துவார்கள். உங்கள் அரைவாசி கட்டணம் நேரடியாக உங்களினுடைய சம்பளத்திலிருந்து நேரடியாக கழிக்கப்பட்டு, பிற்பாடு வேலை தருபவர்களின் அரைவாசி கட்டணத்தினுடன் ஒன்றாக்கப்பட்டு உங்களிற்கு உரிய ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு செலுத்தப்படும்.

நீங்கள் சொந்தமாக தொழில் புரியும் பட்சத்திலோ, அல்லது வேலை செய்யாமல் இருந்தாலோ முழுக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும். ஆனால் தீர்மானிக்கப்பட்டுள்ள

ஆகக் குறைந்த தொகையாகிய (ஒரு வருடத்திற்கு 478 பிறாங்குகள்: 1.1.2018 நிலைப்பாட்டின்படி) கட்டணத்தை நீங்கள் செலுத்த வேண்டும்.

தஞ்சம் கோரியோர், தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் வதிவிட அனுமதியற்ற பாதுகாப்புப் பெற்றவர்கள் போன்றோர் தொழிலை மேற்கொள்ளாமல் இருந்தால், அவர்கள் தமது கட்டணத்தை பின்வரும் வேளைகளில் செலுத்துவார்கள்:

- அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்படும்போது
- நிரந்தர வதிவிட அனுமதி கிடைக்கும்போது
- வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான உதவிபெறும்போது

ஓய்வூதிய நிதி நிலையம் செலுத்தப்பட்ட பணத்திற்கான கணக்கு வரவு விபரங்களினை மேற்பார்வை செய்யும்.

**நீங்கள் ஏதாவது ஒரு தாபனத்தின் கீழ் வேலை செய்யாவிட்டால், நீங்களாகவே நீங்கள் வசிக்கும் மாநிலத்தில் உள்ள ஓய்வூதிய நிதி நிலையத்தில் உங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஓய்வூதிய நிதி நிலையம் தாமாகவே உங்களினை பதிந்து கொள்ள மாட்டாது. அவர்களின் விலாசத்தினை பின்வரும் இணையத்தளத்தில் காணலாம் www.ahv-iv.ch ▸ Kontakte. நீங்கள் கட்டண பணம் செலுத்த தவறும் பட்சத்தில், பிற்காலங்களில் உங்களிற்கு கிடைக்கப் போகின்ற ஓய்வூதிய பணம் (உதாரணத்திற்கு பென்சன் பணம்) குறைவாகவே கிடைக்கும்.**

### எனக்கு ஒரு தாபனம் வேலை வழங்கினால், நான் காப்புறுதிக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?

உங்களின் மொத்த சம்பளத்தொகையில் இருந்து 6,225% (அதாவது ஊதியம் 148,200 பிறாங்கிற்குக் கூடினால் 5.625%) கழிக்கப்படும்.

### எனது குடும்பமும் என்னுடன் சேர்ந்து ஒன்றாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்களா அல்லது அவர்களிற்கு என தனியாக காப்புறுதி செய்ய வேண்டுமா?

வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதி (AHV/IV) தனிப்பட்ட நபர்களிற்கான காப்புறுதியாகும். உங்கள் குடும்பத்தினர்கள், அதற்கான தகுதிக்கு அமைய உடன்பட்டிருந்தால் மட்டும், அதாவது அவர்கள் இங்கே வசித்தால் அல்லது இங்கே அவர்களும் வேலை செய்தால் மட்டும் இணைத்து காப்புறுதி செய்யப்பட்டிருப்பார்கள்.

### மேலதிக தகவல்களை நான் எங்கிருந்து அறிந்து கொள்ளலாம்?

மேலதிக தகவல்களை நீங்கள் உங்களிற்கு பொறுப்பான உள்ள ஓய்வூதிய நிதி நிலையத்தின் மூலமாகவோ அல்லது பின்வரும் இணையத்தளம் ஊடாகவோ அறிந்து கொள்ளலாம் www.ahv-iv.ch ▸ Kontakte.

## 3. தொழில் ஓய்வூதியக் காப்புறுதியின் முக்கியத்துவம்

II

**என்னை இவ்வாறு காப்புறுதி செய்வதின் மூலம் எனக்கு என்ன நன்மை?**
தொழில் ஓய்வூதிய காப்புறுதிக்கான நிலையத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நேரத்தில் நீங்கள் பலவிதமான கடமைகளிற்கும், உரிமைகளிற்கும் கீழ்ப்பட இயங்க வேண்டியவராக உள்ளீர்கள். இவற்றில் மிக முக்கியமானது, ஒழுங்காக அதற்குரிய மாதாந்த கட்டணப்பணம் செலுத்தப்பட வேண்டும். இக் காப்புறுதியினால் நீங்கள் வயோதிப ஓய்வூதியம் பெறுதலின் போது அல்லது விபத்தினால் அங்கவீனம் ஏற்பட்டால் நீங்கள் மரணமானால் உங்கள் மிகுதியாக உயிர் வாழும் குடும்ப அங்கத்தினர்களிற்கு அல்லது உங்களின் சொத்து உரிமை கிடைக்கின்றவர்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளினை பூர்த்தி செய்யும் பட்சத்திலும் ஒரு வகையான பின்தங்கப்பட்டவர்கள் காப்புறுதி வருமதி கிடைக்கும்.

**எந்த சந்தர்ப்பத்தில் இருந்து எனக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது?**
வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதியில (AHV/IV – AVS/AI) காப்புறுதி செய்யப்பட்ட அனைத்து நபர்களும் (விளக்கம்↗ஐப் பார்க்கவும்). அத்துடன் ஏதாவது ஒரு வேலை தளத்தில் இருந்து ஆகக்குறைந்த வருடாந்த சம்பள தொகையான 21150 பிறாங்குகள் (1.1.2018 நிலைப்பாட்டின்படி) சம்பாதிப்பவர்கள். பல இடங்களில் தொழில் செய்பவர்கள், ஆனால் இக்குறிப்பிட்ட ஆகக்குறைந்த தொகையினை ஒரு இடத்தில் சம்பாதிக்காவிடிட்டால், ஏனைய தொழில் நிலையங்களின் சம்பளத்தினை கூட்ட அத்தொகை அளவோ அல்லது கூடுதலாக கிடைத்தால், கட்டாயமாக காப்புறுதி செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் நீங்கள் விரும்பினால் காப்புறுதி செய்யயலாம்.
18 வயது பிறந்த நாள் ஆரம்பித்து தொழில் செய்ய தொடங்கிய பிற்பாடுதான், முதன் முதலாக காப்புறுதியினை ஆரம்பிக்க முடியும்.

**என்ன விதமாக நான் காப்புறுதி நிதிக்கான கட்டணத்தினை செலுத்துவது?**
தொழில் வழங்குபவர்களும் நீங்களுமாக பகிர்ந்து காப்புறுதி கட்டணத்தினை செலுத்த வேண்டும். வேலை தருபவர்கள் ஆகக் குறைந்தது அரைவாசி கட்டணத்தினை செலுத்துவார்கள். உங்கள் கட்டணம் நேரடியாக உங்களினுடைய சம்பளத்திலிருந்து நேரடியாக கழிக்கப்பட்டு, பிற்பாடு வேலை தருபவர்களின் அரைவாசி கட்டணத்தினுடன் ஒன்றாக்கப்பட்டு உரிய தொழில் முற்பாதுகாப்பு சேமிப்பு நிதி நிலையத்திற்கு செலுத்தப்படும்.

நீங்கள் தொழில் செய்யும் இடத்தில் இருந்து, வேறு வேலை செய்யும் இடங்களிற்கு மாறும் தருணங்களில், உங்களினுடைய தொழில் ஓய்வூதிய நிதி புதிய தொழில் வழங்குனருக்கு மாற்றப்படும். நீங்கள் உங்களிற்கு என இதுவரை சேகரித்த முழு சேமிப்பு மூலதனமான நிதி யினை எடுத்து செல்கின்றீர்கள். உங்களினுடைய கடைசியாக வேலை செய்த தொழில் ஓய்வூதிய நிதி நிலையம், உங்களின் சேகரிப்பு நிதியினை புதிதாக வேலை தளத்திற்கு பொறுப்பான தொழில் ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு தங்கள் பாட்டிலேயே மாற்றுதல்

செய்யும். இக்குறிப்பிட்ட காரணங்களிற்காக, சேமிப்பு மூலதனமான நிதி கட்டாயம் உங்களின் புதிய வேலை செய்யும் இடத்திற்கு பொறுப்பான, தொழில் ஓய்வூதிய நிதி நிலையத்திடம் இருக்க வேண்டும். உங்களினால் இப்பணத்தினை சுயவிருப்பத்தின்படி பாவிக்க முடியாது. இப்பணத்தினை நீங்கள் குறிப்பிட்ட விசேட நிபந்தனைகளுக்கு அமையவே எடுக்க முடியும்.

**நான் காப்புறுதிக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?**

ஒவ்வொரு தொழில் ஓய்வூதிய நிதி நிலையமும் சட்ட நிபந்தனைகளிற்கு அமைய, தொகை அளவினை நிர்ணக்கின்றது. அதனால் ஒவ்வொரு தொழில் ஓய்வூதிய நிதி நிலையங்களிலும் தொகையின் அளவில் வித்தியாசங்கள் இருக்கலாம். அத்துடன் இத் தொகையினுடைய அளவு வயதிலும் தங்கியுள்ளது.

**எனது குடும்பமும் என்னுடன் சேர்ந்து ஒன்றாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்களா அல்லது அவர்களிற்கு என தனியாக தங்களை காப்புறுதி செய்ய வேண்டுமா?**

தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதி தனிப்பட்ட நபர்களிற்கான காப்புறுதி. உங்கள் குடும்பத்தினர்கள் வேலை செய்து, ஆகக்குறைந்த தொகையான 21150 பிறாங்குகள் (1.1.2018 நிலைப்பாட்டின்படி) சம்பாதிப்பவர்களாக இருந்தால் மட்டும் தனியாக காப்புறுதி செய்யப்பட்டிருப்பார்கள்.

**மேலதிக தகவல்களை நான் எங்கிருந்து அறிந்து கொள்ளலாம்?**

மேலதிக தகவல்களை நீங்கள் உங்களிற்கு பொறுப்பான தொழில் ஓய்வூதிய நிதி நிலையத்தின் மூலமாகவோ அல்லது உங்களின் வேலை செய்யும் நிறுவனத்தின் ஊடாகவோ அறிந்து கொள்ளலாம்.

## 4. நான் என்னுடைய தற்போதைய தொழிலினை விட்டு, வேறு தொழில் மாறுவதாக இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

**I**

**வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதிக்கு (AHV/IV – AVS/AI):**

நீங்கள் கட்டாயமாக உங்களின் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர் காப்புறுதி இலக்கத்தை புதிய வேலைத்தலத்திற்கு அறிவிக்க வேண்டும்.

**II**

**தொழில் ஓய்வூதிய காப்புறுதி அதாவது பென்சன் காசு நிதிக்கு:**

நீங்கள் கடைசியாக தொழில் செய்த நிறுவனத்திற்கு பொறுப்பான முற்பாதுகாப்பு சேமிப்பு நிதி நிலையத்திற்கு கட்டாயமாக உங்களின் புதிதாக தொழில் ஆரம்பிக்க போகின்ற ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும் (புதிய விலாசத்தினை வேலை தருபவரிடம் அறிய முடியும்). அவ்வாறு செய்வதின் மூலமே இதுவரை சேகரித்த முழு சேமிப்பு மூலதனமான நிதியினை எடுத்து மாற்ற முடியும்.

## 5. நான் தொழிலை விட்டு நீங்கி, நிரந்தரமாக ஓய்வூதியம் (பென்சன் எடுக்காது) பெற்றுக் கொள்ளாமல் சுவிட்சர்லாந்தில் வசிப்பதாயின் என்ன மேற்கொண்டு செய்ய வேண்டும்?

**I**

**வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதிக்கு (AHV/IV – AVS/AI):**

நீங்களாகவே வசிக்கும் மாநிலத்தில் உள்ள ஓய்வூதிய நிதி நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். உங்கள் மாநிலத்திற்கு பொறுப்பான விலாசத்தினை பின்வரும் இணையத்தளத்தில் காணலாம் www.ahv-iv.ch ▸Kontakte.

**II**

**தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதிக்கு:**

உங்களின் முழு சேமிப்பு மூலதனமான நிதியினை காசாக வழங்க அனுமதிக்கப்படமாட்டாது. ஆனால் உங்களிற்கு மூன்று வகையான முறைகளில் இதனை மாற்ற முடியும்:

1. உங்கள் முழு சேமிப்பு மூலதனத்தினை, வங்கி ஒன்றில் விசேடமான ஒரு சேமிப்பு கணக்கு இலக்கத்தில் சேர்த்து வைக்கலாம் (Freizügigkeitskonto).
2. உங்கள் முழு சேமிப்பு மூலதனத்தினை, ஏதாவது ஒரு விசேடமான சேமிப்புக்காப்புறுதி பத்திரத்தில் சேமித்து வைக்கலாம் (Freizügigkeitspolice).
3. அதனைவிட உங்கள் முழு சேமிப்பு மூலதனத்தினை கூட்டுறவு சேமிப்பு நிலையத்தில் சேமித்து வைக்கலாம்.

நீங்கள் எதனை தெரிவு செய்கின்றீர்கள் என்பதினை உங்களினுடைய ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு அறிவிக்கவும்.

மேலதிக விபரங்களிற்கு உங்களினுடைய தற்போதைய ஓய்வூதிய நிதி நிலையம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## 6. என்ன வகையான பத்திரங்களினையும் தகவல் அத்தாட்சிகளினையும் நான் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்?

சமூக சேவை காப்புறுதி நிலையங்களில் இருந்து கிடைக்கின்ற அனைத்து பத்திரங்களினையும் தகவல் அறிவுரைகளினையும் கட்டாயமாக நீங்கள் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்!

நீங்கள் சமூக சேவை காப்புறுதி நிலையங்களிடம் இருந்து உதவிகளைப்பெற விரும்பும் சந்தர்ப்பங்களில், உங்களிடம் இருந்து பத்திரங்களினையும் தகவல் அத்தாட்சிகளினையும் சமர்ப்பிக்க வேண்டிவரலாம். ஆகவே தயவு செய்து அவைகளைப் பாதுகாப்பாக வைக்கவும்:

- **வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதி அட்டை:** இவ் அடையாள அட்டை உங்களிற்கு ஓய்வூதிய நிதி நிலையத்தின் மூலமாக காப்புறுதி செய்த ஆரம்பத்திலேயே அனுப்பி வைக்கப்படும்.
- **அனைத்துத் தேவைகளுக்குமான உங்களின் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர் காப்புறுதி நிதியின் சேமிப்புக்கணக்கு வரவு விபரணம் அடங்கிய பத்திரம்:** உங்களின் கணக்கு இலக்கத்திற்கான வரவுகள் அடங்கிய பிரதியினை எழுத்து மூலமாக ஓய்வூதிய நிதி நிலையத்தினரிடமிருந்து கட்டணமின்றி பெற்று கொள்ளலாம்.
- **சம்பள கணக்கு மாதாந்தபத்திரம்:** உங்களின் தொழில் நிலையத்திடம் இருந்து, அடிப்படையாக மாதாந்தம் கிடைக்கின்ற சம்பள கணக்கு வரவுகள் பத்திரமாகும். அப்பத்திரத்தில் உங்களின் சம்பளமும், கழிக்கப்பட்ட தொகை விபரங்கள் பற்றிய கணக்குகள் எழுதப்பட்டிருக்கும். அவ்வாறான பத்திரங்கள் மூலம் தான் உங்களினால் எவ்வளவு காலம் வேலை செய்தீர்கள் என்றும், உங்கள் சம்பளத்தில் இருந்து எவ்வளவு தொகை கழிக்கப்பட்டு உள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்த முடியும். இதனால், நீங்கள் உங்களிற்கான காப்புறுதி சம்பாதிப்பினை பாவிக்கின்ற நேரத்திலோ அல்லது வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, செலுத்திய காப்புறுதி கட்டணத்தை திரும்ப கேட்கின்ற நேரங்களிலும், உங்களின் கணக்கு விபரங்களில் வேறுபாடுகளை ஒத்து கொள்ளாத தருணங்களிலும், உங்களிற்குப் பிரயோசனமாக இருக்கும் (விளக்கம் 7டி). அதனைவிட உங்களின் அனைத்து தொழில் தாபனங்களின் பெயர்களையும் விலாசங்களினையும் தெரிந்து வைத்திருப்பது முக்கியமானதாகும்.
- **சம்பளம் கிடைத்ததிற்கான வருடபத்திரம்:** மேற்குறிப்பிட்ட பயனளிக்கின்றன. இந்த பத்திரங்கள் உங்களிற்கு தொழில் வழங்கும் நிறுவனத்தினர், வரி செலுத்தும் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வழங்கப்படுகின்றது. இந்த பத்திரத்தில் கையளிக்கப்பட்ட சம்பள தொகையும் சம்பளத்தில் இருந்து எடுத்த தொகையின் பங்கினையும் குறிக்கப்பட்டு இருப்பதுடன், இப்பத்திரம் வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும்.
- **2வது ஓய்வு நிதியின் வருங்கால சேமிப்பு ஒப்பந்த பத்திரம்:** இந்த பத்திரத்தில் நீங்கள் தொழிலினை விட்டு ஓய்வூதியம் பெறும் போது அல்லது அங்கவீனம் ஏற்பட்டால். நீங்கள் மரணமானால் உங்களிற்கு கிடைக்க போகின்ற நிதியின் தொகையின் அளவு குறிக்கப்பட்டு இருக்கும். அத்துடன் நீங்கள் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு முன்பு ஒப்பந்த உடன்படிக்கையை ரத்து செய்தால், கிடைக்க பெறும் முழு சேமிப்பு மூலதன நிதி தொகையினையும் குறிக்கப்பட்டு இருப்பதுடன் அதற்கான உடன்பாடுகளினையும் விபரிக்கப்பட்டு இருக்கும். உங்களினால் விரும்பிய நேரங்களில் இப் பத்திரத்தினை பெறுவதற்கு முற்பாதுகாப்பு சேமிப்பு நிதி நிலையத்திடம் விண்ணப்பிக்கலாம்.
- **ஓய்வூதிய நிதி நிலையத்தின் விதிமுறைகள் பத்திரம்:** ஒவ்வொரு ஓய்வூதிய நிதி நிலையமும் தங்களுக்கு என்று சொந்தமாக விதிமுறைகளை கடைப்பிடிக்கின்றன. இப் பத்திரங்களில் காப்புறுதி செய்தவர்களின் பொதுவான ஒழுங்கு விதி முறைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

## B சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதாக இருந்தால், நான் முற்கூட்டியே என்ன ஆயத்தங்களினை செய்ய வேண்டும் அத்துடன் எனக்கு என்ன உரிமைகள் உள்ளன?



நாட்டை விட்டு நிரந்தரமாக குடிபெயர்வதாக இருந்தால், முற்கூட்டியே திட்டமிட்டு ஆயத்தங்களினை செய்திருக்க வேண்டும். அப்படி முக்கிய நடவடிக்கை ஒழுங்கு முறைகளை, குறிப்பாக செய்து இருக்கும் பட்சத்தில் மட்டுமே, உங்களிற்கு கிடைக்க இருக்கும் சேமிப்பு வருமதிகளை ஒரு தடங்கலும் இல்லாமல் பெற்று கொள்ள முடியும். வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதியும் (AHV/IV – AVS/AI) இ தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதியும் இரண்டு வேறுபட்ட சேமிப்பு காப்புறுதிகள் என்ற வகையில், வேறுபட்ட ஒழுங்கு விதிகளைக் கொண்டவை. அதனால் அதனை பெற்று கொள்ள வேறுபட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

சட்டத்திற்கு மாறாக நாட்டை விட்டு வெளியேறி, வேறு ஒரு நாட்டிற்கு களவாக சென்று அங்கு வசிக்கும் பட்சத்தில், அவர்களினால் சட்டப்படி சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு வெளியேறியதர்க்கான அத்தாட்சியினை சமர்ப்பிக்க இடைஞ்சலாகும். அதனால் காப்புறுதி நிதி நிலையங்களில் இருந்து சேமிப்பு வருமானத்தினை பெற்று கொள்ள இடைஞ்சல் ஏற்படும்.

## 7. வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி **(AHV/IV – AVS/AI)**

நீங்கள் நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதற்கு முன்பு, உங்கள் வேலை செய்தஇடங்களில் செலுத்தப்பட்ட வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதி சேமிப்புக்கணக்கு வரவுகளினை, சோதித்து பார்க்கும் வண்ணம் ஆலோசனை வழங்குகின்றோம். உங்களின் கணக்கு இலக்கத்திற்கான வரவுகள் அடங்கிய பிரதியினைப்பெற எழுத்து மூலமாக அல்லது **www.ahv-iv.ch ▸ Kontakte** எனும் இணையத்தளம் ஊடாக ஓய்வூதிய நிதி நிலையத்தினர்க்கு (உங்கள் காப்புறுதி இலக்கத்தைக் குறிப்பிட்டு) அறிவித்தால் இலவசமாக பணம் செலுத்திய கணக்கு விபரங்களைப் பெற்று கொள்ளலாம்3.

**I**

உங்கள் தாய் நாடு, சுவிட்சர்லாந்து நாட்டுடன் சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை ஒன்றில் இணைந்து செயல்பட்டால் வேறுநடைமுறைகள் உள்ளன. அரசியல் தஞ்ச அங்கீகாரம் பெற்றவர்கள் அல்லது நாடற்றவர்களிற்கு என விசேட நடைமுறைகள் உள்ளன. ஒன்றில் இணைந்து செயல்பட்டால் வேறுநடைமுறைகள் உள்ளன. அரசியல் தஞ்ச அங்கீகாரம் பெற்றவர்கள் அல்லது நாடற்றவர்களிற்கு என விசேட நடைமுறைகள் உள்ளன.

## 7a. சமூக காப்புறுதி நிதி உடன்படிக்கை ஒன்று இருக்குமானால்:

கீழ் குறிப்பிட்ட நாடுகளுடன் சுவிட்சர்லாந்து சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது[4]. அவுஸ்திரேலியா, சிலி, சீனா, போஸ்னியன் மற்றும் கேசிகோவினா, இந்தியா, இஸ்ராயேல், யப்பான், கனடா, மசடோனியன், பிலிப்பைன்ஸ், சன் மறினோ, சேர்பியன், தென் கொரியா, துருக்கி, உருகுவே மற்றும் ஐக்கிய அமெரிக்கா.

*3 அறிவுரை இலக்கம் 1.01 "வயோதிபகால தாரமிழந்தவர்க்கான நிதி வலது குறைந்தவர்க்கான நிதி கணக்கு இலக்கத்திற்கு" (Auszug aus dem Individuellen Konto IK ) செலுத்திய பண விபரங்களின் பிரதியினை ஓய்வூதிய நிதி நிலையத்திடமிருந்து (AHV/IV – AVS/AI) அல்லது அரச சமூகசேவை காப்புறுதிநிதி திணைக்களத்திடமிருந்து (BSV) அல்லது பின்வரும் இணையத்தளத்தில் காணலாம www.ahv-iv.ch ▸ Merkblätter/Allgemeines.*

*4 சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை ஐரோப்பிய கூட்டரசு (EU) நாடுகளுடனும், ஐரோப்பிய வர்த்தக வலய (EFTA) நாடுகளுடனும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றது (குறிக்கப்பட்ட நாட்டவர்கள் கட்டுப்பாடுகளின்றி தொழில் புரியும் உடன்படிக்கை) அடிக்குறிப்பு இலக்கம் 1 ஐப் பார்க்கவும்.*

நீங்கள் மேலே சொன்ன நாட்டு குடியுரிமையாளர்களாக இருக்கும் பட்சத்தில், சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதாக இருந்தால், உங்களிற்கு ஒப்பந்த விதிப்படி சமூக காப்புறுதி நிதி வழங்கப்படும்[5]. அரசியல் தஞ்ச அங்கீகாரம் பெற்றவர்களும் அல்லது தாய் நாடற்றவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களும், இவ் நாடுகளிற்கு சென்று அங்கேயும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், இதே ஒப்பந்த விதி செல்லுபடியானதாகும்.

சமூக காப்புறுதி நிதி வழங்கப்படுவதற்கான உடன்படிக்கை செயல்படுவதன் மூலம், வெளி நாடுகளிலும், வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான ஓய்வூதிய மாதாந்த நிதி (AHV/IV – AVS/AI) வழங்கப்படும். இதனால் சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதாக இருந்தாலும், வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, செலுத்திய காப்புறுதி நிதி வழங்கப்படமாட்டாது (7b யைப் பார்க்கவும்) (அவுஸ்திரேலியா, சிலி, சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், மற்றும் உருகுவே நாட்டு பிரஜாவுரிமை உள்ளவர்களிற்கு தனியாக வேறு ஒரு விசேட உடன்படிக்கை அமுலில் உள்ளது). தனித்தனியாக ஒவ்வொரு சமுகக்காப்புறுதி உடன்பாடுகளுக்கும் தகவல் பிரசுரங்களை அரச சமூக காப்புறுதிகள் திணைக்களத்திடம் (BSV) பெறலாம்.

உங்களிற்கு எவ்வளவு சேமிப்பு ஓய்வு நிதி தொகை கிடைக்கலாம் என நீங்கள் அறிய விரும்பும் பட்சத்தில், ஓய்வூதிய நிதி நிலையத்தினர்க்கு அறிவித்து அதை அறிந்து கொள்ள முடியும். இக்கணக்கு விபரங்களினை அறிவதற்கு குறைந்த கட்டணம் உங்களிடமிருந்து அறவிடப்படும்.

நீங்கள் ஏற்கனவே சுவிட்சர்லாந்து நாட்டில் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான ஓய்வூதியம் (AHV/IV) பெற்று கொள்பவராக இருந்தாலும், இது வெளிநாடுகளிலும்[6] வழங்கப்படும். ஆனால் மேலதிகமாக கிடைக்கின்ற சலுகைகள் வெளி நாடுகளில் வழங்கப்படமாட்டாது.

**Genf ல் உள்ள ஓய்வூதிய காப்புறுதி நிலைத்திற்கு (SAK – CSC) தவறாமல் உங்கள் வெளிநாட்டு முகவரியை அறிவித்துக் கொள்ளுங்கள்!**

*5/6 ஒப்பந்த உடன்படிக்கையை பொறுத்து கட்டுப்பாடுகள் உள்ளது.*

## 7b. சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில்:

அப்படியாயின் வெளிநாடுகளில் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான ஓய்வூதிய நிதி (AHV/IV – AVS/AI) வழங்கப்படமாட்டாது. ஆனால் உங்களினால், வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, செலுத்தப்பட்ட காப்புறுதி கட்டணத்தினை மீளப்பெற்று கொள்ள விண்ணப்பிக்க வேண்டும்7.

### எப்பொழுது மீளப்பெற்று கொள்ள முடியும், என்றால் நீங்கள்:

- ஆக குறைந்தது ஒரு வருட காலமாக வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான காப்புறுதி நிதி கட்டணம் (AHV/IV – AVS/AI) செலுத்தியிருந்தால்.
- நீங்கள் சுவிச்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதாக இருந்தால். வாழ்க்கைதுணைவர் அல்லது துணைவியும் 25 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளும் கட்டாயம் உடன் வெளியேற வேண்டும்8.
- சுவிச்சர்லாந்து நாட்டு வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான ஓய்வு நிதி (AHV/IV – AVS/AI) எடுக்காமல் இருந்தால்.

  *விதிவிலக்கு: நீங்கள் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான காப்புறுதி நிதி சேமிப்பு கிடைத்தால் சுவிச்சர்லாந்து நாட்டை விட்டு வெளியேறும் போது கிடைக்க மாட்டாது, இருந்த போதும் சேமிப்பு கட்டணத்தினை மீள செலுத்தும் வண்ணம் விண்ணப்பிக்கலாம். அவ்வாறு செய்தால், மிகுதியாக தருமதியான தொகையில் இருந்து, இது வரையும் கிடைத்த பணத்தின் தொகையினை கழித்து, மிகுதியினை தரப்படும்.*

### உங்கள் அவதானத்திற்கு:

- உங்களிற்கு காப்புறுதி நிதி சேமிப்பு வருமதி முழுவதும் ஒன்றாக வழங்கப்பட்டால், அதற்கு பிற்பாடு வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்தவர்க்கான காப்புறுதி நிதி சேமிப்பு (AHV/IV – AVS/AI) அனைத்து சேவைகளும் நிறுத்தப்படும். அதற்கு பிற்பாடு உங்களிற்கு சுவிச்சர்லாந்து நாட்டின் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதி சேமிப்பு (AHV/IV – AVS/AI) வழங்கப்பட மாட்டாது.
- தொழில் செய்பவர்களினதும் வேலை தருபவர்களினதும் செலுத்திய வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, காப்புறுதி நிதி கட்டணம் மட்டுமே (AHV – AVS) வட்டி தொகை இல்லாது வழங்கப்படும். சமூக சேவை உதவி திணைக்களத்தினால் செலுத்தப்பட்ட பணம் வழங்கப்படமாட்டாது.
- வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதிக்கு செலுத்திய கட்டணமும் (IV – AI) வழங்கப்படமாட்டாது.
- வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, காப்புறுதி நிதி கட்டணம் (AHV - AVS)இ மீள கிடைக்க போகின்ற தொகை, வரையறுக்கப்பட்ட தொகைக்கு9 மிகக்கூடுதலாக இருக்கும் தருணத்தில், வரையறுக்கப்பட்ட தொகையளவுக்குக் குறைக்கப்படும்.
- நீங்கள் மரணமானால், உங்களினுடைய வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவி அல்லது உங்கள் பிள்ளைகள்[10], நிபந்தனை விதிகளினை பூர்த்தி செய்யும் பட்சத்தில், பின்தங்கியிருப்பவர்கள் நிதி கிடைக்கும்.

*7 வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலதுகுறைந்ததவர்க்கான காப்புறுதி நிதி கட்டணம் (AHV) மொத்த சம்பளத்தில் இருந்து 8.4 வீதமாகும் (தொழில் செய்பவர்களினதும் வேலை தருபவர்களினதும் கூட்டிய தொகை ஆகும்).*

*8 விதிவிலக்கு: வயது வந்த பிள்ளைகள் தொழிற்கல்வியைக் கற்று அதை நிறைவுசெய்திருந்தால் சுவிசில் வசிக்க முடியும்.*

*9 உங்களின் மூலதனத்திற்கு வருங்காலத்தில் இத் தொகை கிடைக்கலாம், என்று அண்ணளவாக கணிக்கப்பட்ட ஒரு தொகையின் அளவு.*

*10 பிள்ளைகள் 18 வயது வரைக்கும், தொழிலுக்கு படித்தால் 25 வயது வரைக்கும்.*

**வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, காப்புறுதி நிதி கட்டணம் (AHV – AVS), மீள கிடைக்க நான் எவ்வாறு விண்ணப்பம் செய்ய முடியும்?**

நீங்கள் கட்டாயம் உங்களது ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு அல்லது சுவிட்சர்லாந்தின் ஓய்வூதிய நிதி நிலையத்திற்கு (SAK) விண்ணப்பம் செய்ய வேண்டும்.

இதற்கு நீங்கள் ஓய்வூதிய நிதி நிலையத்திடமிருந்து பெறும் "செலுத்தப்பட்ட வயோதிபகால தாரமிழந்தவர்க்கான, காப்புறுதி கட்டணத்தினை மீளப்பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் படிவம் இல. 602.101 («Antrag auf Rückvergütung von AHV-Beiträgen») ஐ நிரப்பி அனுப்ப வேண்டும் அல்லது இணையத்தளமான www.ahv-iv.ch ▸Formulare/Allgemeine Verwaltungsformulare இல் காணலாம். விண்ணப்பப்படிவத்தை நீங்கள் கீழ்வரும் பத்திரங்களுடன் ஒன்றுசேர்த்து அனுப்புதல் வேண்டும்:

- வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்ததவர்க்கான காப்புறுதி இலக்கம்,
- சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு நிரந்தரமாக குடிபெயர்வதற்கான அத்தாட்சி பத்திரம்,
- உங்களினுடையதும், உங்கள் வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவியினுடையதும், தேசிய உரிமையை அத்தாட்சிப்படுத்தும் பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு பிரதி,
- விவாகரத்து செய்து இருந்தால் விவாகரத்து செய்த சட்டபூர்வமான திகதியடங்கிய நீதிமன்ற தீர்ப்பு பத்திரம்,
- அரசியல் தஞ்ச அங்கீகாரம் பெற்றவர்கள் அல்லது நாடற்றவர்கள் தங்களை கட்டாயமாக அத்தாட்சிபடுத்த வேண்டும்,
- வெளிநாட்டில் வசிக்கப் போகும் இடத்திற்கான விபரங்கள், அத்துடன் தற்போது வெளிநாட்டில் வசிப்பதற்கான அத்தாட்சி பத்திரம். அவ் அத்தாட்சி பத்திரத்தில் உங்களினுடைய வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவியினுடையதும், 25 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளினையும் சேர்த்து இருக்க வேண்டும்.

**உங்கள் அவதானத்திற்கு:**

- கணவனும் மனைவியும் என்றால், கட்டாயம் இரண்டு பேரும் தனித்தனி மீள வழங்கும் விண்ணப்பம் செய்ய வேண்டும்
- திருப்பித்தரப்பட வேண்டிய நிதி தொகை, பொதுவாக வெளிநாடுகளில் தான் வழங்கப்படும்
- திருப்பித்தரப்பட வேண்டிய நிதி தொகை வழங்கப்பட பல மாதங்களாகும்
- திருப்பித்தரப்பட வேண்டிய நிதி தொகை, உங்களின் சொந்த வங்கி இலக்கத்திற்கு அல்லது உங்களிடம் நேரடியாக மட்டுமே தான் வழங்கப்படும்.

## 8. தொழில் ஓய்வூதிய இரண்டாவது காப்புறுதி நிதி:

II

சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதாக இருந்து, அது ஐரோப்பிய கூட்டரசு நாடுகளுக்கோ அல்லது ஐரோப்பிய வர்த்தக வலய நாடுகளுக்கு வெளியில் இருக்குமாக இருந்தால் நீங்கள் இரண்டு வகையாக:

- இதுவரை சேகரித்த முழு சேமிப்பு மூலதனமான நிதியினை எடுத்து **பெற்று கொள்வதற்கு** விண்ணப்பம் செய்யலாம் அல்லது
- நீங்கள் உங்கள் **முற்பாதுகாப்பு காப்புறுதி நிதியினை தொடர்ந்தும் விட்டு வைக்கலாம்** (மூன்று வகையான முறைகளில் இதனை மாற்ற முடியும் என்ற, 5வது நிபந்தனையில் தொழில் ஓய்வூதிய காப்புறுதி). அவ்வாறு செய்தால் உங்களிற்கு ஓய்வூதிய காசு மாதாந்தம் கிடைக்கும், நீங்கள் தொழிலினை விட்டு நீங்கும் போது அல்லது விபத்தினால் அங்கவீனம் ஏற்பட்டால் வருமதிகளைப் பெறலாம். நீங்கள் மரணமானால் உங்கள் மிகுதியாக உயிர் வாழும் குடும்ப அங்கத்தினர்களிற்கு அல்லது உங்களின் சொத்து உரிமை கிடைக்கின்றவர்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளினை பூர்த்தி செய்யும் பட்சத்திலும் ஒரு வகையான பின்தங்கியிருப்பவர்கள் நிதி கிடைக்கும்.

தொழில் ஓய்வூதிய (பென்சியோன) நிதியும், அதற்கான மேலதிக வருமதி சலுகைகளும் முற்பாதுகாப்பு நிதி ஒப்பந்த விதிப்படி வெளிநாடுகளிலும் கிடைக்க பெறும்.

## 8a. எனது தொழில் ஓய்வூதிய காப்புறுதி சேமிப்பினை, எனது கையில் திரும்பவும் கிடைக்க நான் எவ்வாறு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

**நீங்கள் கட்டாயமாக உங்களின் இறுதியாக தொழில் செய்த நிறுவனத்தின், முற்பாதுகாப்பு சேமிப்பு நிலையத்தினுடன் நீங்களாகவே தொடர்பு கொள்ள வேண்டும்.**

நீங்கள் கட்டாயம் உங்களின் கடைசியாக தொழில் செய்த நிறுவனத்தின் காப்புறுதி ஓய்வூதிய நிலையத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். இதனை நாட்டை விட்டு நீங்கள் வெளியேறுவதற்கு முதலே செய்யலாம். அதற்கான விண்ணப்ப படிவங்களினை உங்களின் கடைசியாக வேலை தொழில் நிறுவனத்தில் இருந்து பெற்று கொள்ளலாம். அதற்கு கேட்கப்பட்ட பத்திரங்களுடன் சேர்த்து கீழ் சொல்லப்பட்ட அத்தாட்சிகளினையும் சமர்ப்பிக்க வேண்டும்:

- நீங்கள் சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்வதிற்கான அத்தாட்சி அல்லது ஒரேயடியாக குடிபெயரப் போவதிற்கான அத்தாட்சி பத்திரம், உதாரணத்திற்கு மக்கள் சபைப்பகுதியில் பெற்ற பத்திரம்.

- நீங்கள் திருமணமாகி இருந்தால் வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவியினுடையதும், சம்மதம் தெரிவிக்கின்ற கையொப்ப அத்தாட்சியும் சேர்த்து இருக்க வேண்டும்.

உங்களிற்கு முழு சேமிப்பு மூலதன நிதி முழுமையாக வழங்கப்பட்டால், அதற்கு பின்பு உங்களின் தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதியில் இருந்து மேலதிகமாக நிதி பெற்று கொள்ள முடியாது. அதாவது தொழில் ஓய்வூதிய நிதி (பென்சியோன் காசு) கிடைக்க மாட்டாது.

அநேகமாக நாட்டை விட்டு வெளியேறிய பிற்பாடு தான் இந்த சேமிப்பு நிதி வழங்கப்படும்.

## 8b. நான் சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு ஒரேயடியாக குடிபெயர்ந்த பிற்பாடு, தொழில் ஓய்வூதிய காப்புறுதி (பென்சன் காசு) நிதியில் இருந்து நிதி பெற்று கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?

**நீங்கள் கட்டாயமாக உங்களின் இறுதியாக தொழில் செய்த நிறுவனத்தின், முற்பாதுகாப்பு சேமிப்பு நிலையத்துடன் நீங்களாகவே தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது எங்கும் சென்று பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனத்தில் ஒரு வங்கிக்கணக்கோ அல்லது எங்கு சென்றாலும் மாற்றிக்கொள்ளும் உறுதிப் பத்திரமோ வைத்திருக்க வேண்டும் (விளக்கம் 5ஐ பார்க்க)**

தொழில் ஓய்வூதிய காப்புறுதி முழு சேமிப்பு மூலதனமான நிதியினை (8a விளக்க அமைப்பின்படி) மீள காசாக பெற்றுக் கொள்ளாது, சேமிப்பில் வைப்பீடு செய்தால், உங்களிற்கான தொழில் ஓய்வூதிய காப்புறுதி முற்பாதுகாப்பு செல்லுபடியானதாக இருக்கும். நீங்கள் கட்டாயமாக உங்களின் தொழில் செய்த நிறுவனத்தின் முற்பாதுகாப்பு சேமிப்பு நிலையத்திற்கு நீங்கள் எந்த தொழில் முற்பாதுகாப்பு (பென்சியோன் காசு) சேமிப்பு மூலதனமான நிதி தேவை என அறிவிக்க வேண்டும். இதற்கு மூன்று ஒழுங்கு விதிமுறைகள் உள்ளன (5வது விளக்கப்படி "தொழில் முற்பாதுகாப்பு").

உங்களின் தற்போதைய காப்புறுதி ஓய்வூதிய நிலையத்தின் மூலமாக தகவல்களை பெற்றுக் கொள்ளவும்.

சேமிப்பு மூலதனம் வைப்பிலிடப்பட்டுள்ள காப்புறுதி நிலையத்திற்கு அல்லது வங்கிக்கு உங்களின் விலாசம் ஒவ்வொரு முறையும் மாறும் தருணங்களில், வெளிநாடாக இருந்தாலும் அறிவிக்கவும்.

## 8c. நான் எனது முழுசேமிப்பினை, கவனிக்காது விட்டு வைத்தால் அதற்கு என்ன நடைபெறலாம்?

**உங்களின் தற்போதைய முற்பாதுகாப்பு சேமிப்பு நிலையம் நீங்கள் தொழிலை விட்டு விலகினதிலிருந்து, ஆகக் குறைந்தது 6 மாதங்களுக்குள் அல்லது ஆகக்கூடியது இரண்டு வருடங்களிற்குள் உங்களின் தொழில் ஓய்வூதிய காப்புறுதி முழு சேமிப்பு மூலதனமான நிதியினை, ஓய்வு நிதி சேமிப்பு நிலையத்திற்கு அனுப்பி அங்கு வைப்பிலிடப்படும். நீங்கள் சேகரித்த முழு சேமிப்பு மூலதனமான நிதியினை பெற்று கொள்வதற்கு, இந்த சேமிப்பு நிதி தாபனத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.**

நீங்கள் சேகரித்த முழு சேமிப்பு மூலதனமான ஓய்வு நிதி பணம் உள்ளதா என அறிந்து கொள்வதற்கு, மத்திய ஓய்வு நிதி தாபனத்திற்கு அல்லது காப்புறுதி ஓய்வூதிய நிலையத்தின் மூலமாக தகவல்களை பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்ய வேண்டும்.


நீங்கள் முன்பு தொழில் செய்த இடங்களில் இருந்து, உங்களின் கடைசியாக தொழில் செய்யும் நிறுவனத்தின், காப்புறுதி ஓய்வூதிய நிலையத்திற்கு அனைத்து பணங்களும் மாற்றப்பட்டு உள்ளதா என சோதித்து பார்க்கவும். உங்களிற்கு அது உறுதியாக தெரியாமல் இருக்கும் பட்சத்தில், மத்திய காப்புறுதி ஓய்வூதிய நிலையத்தில் இருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்ய வேண்டும்.

## 9. விபத்து காப்புறுதி நிதி கிடைத்தல்

**நீங்கள் சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவதற்கு முதல், உங்களின் கடைசியாக தொழில் செய்யும் நிறுவனத்தின், விபத்து காப்புறுதி ஓய்வூதிய நிலையத்தினுடன் தொடர்பு கொண்டு சுவிட்சர்லாந்து நாட்டில் விபத்து நடந்தால் கட்டாய விபத்து காப்புறுதி நிதி வழங்கும் காப்புறுதியுள்ளதா என விசாரிக்கும் படி ஆலோசனை தருகின்றோம்.**

நீங்கள் ஏற்கனவே சுவிட்சர்லாந்து நாட்டில் விபத்து காப்புறுதி ஓய்வு நிதி பெற்றுக் கொள்பவராக இருப்பின் இக் கட்டாய நிதி வெளிநாடுகளிலும் செலுத்தப்படும்.

## C சுவிட்சர்லாந்து நாட்டில் நான் இனிமேல் வசிக்காமல் இருந்தால், எனக்கு என்ன உரிமைகள் உள்ளன?



# 10. வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, காப்புறுதி நிதியில் AHV/IV உள்ள எனது உரிமை

I

நீங்கள் இந்த நாட்டை விட்டு ஒரேயடியாக வெளியேறுவதற்கு முதல் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, செலுத்திய காப்புறுதி நிதி கட்டணம் மீள கிடைக்க விண்ணப்பிக்காது விட்டால், உங்களினால் இவ் விண்ணப்பத்தினை வெளிநாடுகளில் இருந்தும் (விதி அமைப்பு 7b ஐ பார்க்கவும்) விண்ணப்பிக்கலாம்.

**தயவுசெய்து கவனத்தில் எடுக்கவும்:**

- உங்களின் தாய் நாட்டுடன் சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை விதி இல்லாத பட்சத்தில் மட்டுமே கட்டணம் மீள கிடைக்க சந்தர்ப்பம் உள்ளது (அவுஸ்திரேலியா, சிலி, சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், தென் கொரியா மற்றும் உருகுவே நாட்டைத் தவிர).
- குறிக்கப்பட்ட காப்புறுதி நிதி பெறும்நிலை ஆரம்பித்து இந்நிதிகளைப் பெறாமல் விட்டு 5 வருடங்களுக்கு மேல் சென்றால் அதன் பின்பு உங்களிற்கு சேமிப்பு காப்புறுதி நிதி பணம் மீண்டும் திருப்பி வழங்கப்படமாட்டாது. அதன் பிற்பாடு உங்களினால் இந்த நிதி பணத்தினை திரும்பி கேட்க முடியாது.

உங்கள் தாய் நாட்டுடன் அல்லது உங்களை ஒரு தெரிவு செய்யப்பட்ட அகதியாகவோ அல்லது தெரிவு செய்யப்பட்ட தாய் நாடற்றவர் என அங்கீகரிக்கப்பட்டு வசிக்கும் ஒரு நாட்டுடன் சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை11 அமுலில் இருந்தால் (விதி, 7aல் உள்ள நாடுகள் பட்டியலை பார்க்கவும்):

- சுவிட்சர்லாந்து நாட்டு வயோதிப ஓய்வூதிய நிதி பெறும் வயதில் (ஒரு பங்கு) வயோதிப நிதி கிடைக்க தகுதியுள்ளது
- நீங்கள் அங்கவீனரானால், சுவிட்சர்லாந்து நாட்டு அங்கவீன ஓய்வு நிதி பெற (ஒரு பங்கு) தகுதியுள்ளது. அங்கவீன தன்மையின் அளவு 50 வீதத்திற்கு மேற்பட்டதாக இருந்தால் மட்டுமே வெளி நாடுகளில் அங்கவீனர்க்கான ஓய்வு நிதி வழங்கப்படும்.
- நீங்கள் மரணமானால், உங்களினுடைய வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவி அல்லது உங்கள் பிள்ளைகள் பின்தங்கியிருப்பவர்கள் நிதியினை பெற்றுக் கொள்ள முடியும்.

*11 சமூகக் காப்புறுதி ஒப்பந்தங்கள் குறித்த தனித்தனியான விபரங்களை மத்திய சமூகக் காப்புறுதித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (BSV).*

**பொதுவாக அமுலிலுள்ள விதி:**

குறைந்த காலங்களிற்கு (AHV/IV – AVS/AI), காப்புறுதி நிதி பணம் செலுத்தியிருந்தால், உங்களிற்கு அல்லது உங்களினுடைய வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவி அல்லது உங்கள் பிள்ளைகளிற்கு, மாதாந்தம் ஓய்வு நிதி வழங்கப்படமாட்டாது, அதற்கு பதிலாக ஒரே தரத்தில் (சராசரி மொத்த தொகை) ஓய்வு நிதி தொகை வழங்கப்படும்.

### ஓய்வு நிதி தொகையினை (சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை விதி அமுலில் உள்ள பட்சத்தில் மட்டும்) பெற்றுக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?

**நீங்கள் கட்டாயமாக உங்களின் ஓய்வு பண காப்புறுதி நிதிக்கு நீங்களாகவே தொடர்பு கொள்ள வேண்டும். ஓய்வூதிய நிதி நிலையம் (AHV/IV – AVS/AI) தானாகவே இதனை செய்ய மாட்டாது. இவ் விண்ணப்பம் தனியாக உங்களிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும். நீங்கள் திருமணம் செய்து இருந்தால் உங்கள் வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவி சுவிட்சர்லாந்தில் காப்புறுதி செய்து இருந்தால், அவருக்கும் அத்தகுதியிருக்குமாயின், அவரும் தானாகவே, ஓய்வுப் பண காப்புறுதிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.**

#### வயோதிப ஓய்வூதியம் (AHV-AVS):

- நீங்கள் உங்களின் தாய் நாட்டில் வசிக்கும் பட்சத்தில், நீங்கள் கட்டாயமாக உங்களின் இடத்தில் பொறுப்பாக உள்ள சமூக சேவை காப்புறுதி நிதி நிலைய கிளையுடன் தொடர்பு கொள்ள வேண்டும்[12].
- நீங்கள் வேறு நாட்டில் வசிக்கும் பட்சத்தில், நீங்கள் கட்டாயமாக நேரடியாக ஜெனீவாவிலுள்ள சுவிட்சர்லாந்து ஓய்வூதிய காப்புறுதி நிலையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

#### அங்கவீனர்க்கான ஓய்வூதியம் (IV-AI):

- நீங்கள் உங்களின் தாய் நாட்டில் வசிக்கும் பட்சத்தில், நீங்கள் கட்டாயமாக உங்களின் இடத்தில் பொறுப்பாக உள்ள சமூக சேவை காப்புறுதி நிதி நிலைய கிளையுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.
- நீங்கள் வேறு நாட்டில் வசிக்கும் பட்சத்தில், நீங்கள் கட்டாயமாக நேரடியாக ஜெனீவாவிலுள்ள சுவிட்சர்லாந்து அங்கவீனர் காப்புறுதி நிலையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**உங்களின் ஓய்வு பண காப்புறுதி நிதி அல்லது ஓரே தரத்தில் வழங்கும் மொத்த ஓய்வு காப்புறுதி பணம் (AHV/IV – AVS/AI) நேரடியாக உங்களினுடைய கணக்கு இலக்கத்திற்கு மட்டுமே செலுத்தப்படும்..**

*12 இதற்கான முகவரிகளை மத்திய சமூகக் காப்புறுதித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (BSV).*

## 11. தொழில் முற்பாதுகாப்புக் காப்புறுதி நிதியில் உள்ள எனது உரிமைகள் (2ம் தூண்)

**II**

நீங்கள் இந்த நாட்டை விட்டு ஒரேயடியாக வெளியேறுவதற்கு முன்பாக தொழில் ஓய்வு காப்புறுதி முழுச் சேமிப்பு தொகையை மீளப் பெறுவதற்கு விண்ணப்பிக்காது விட்டால், உங்களினால் இவ் விண்ணப்பத்தினை வெளிநாடுகளில் இருந்தும் (விதி அமைப்பு, 8 a ஐ பார்க்கவும்) விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் உங்களின் தொழில் ஓய்வு காப்புறுதி நிதியினை முற்பாதுகாப்புக்கு என விட்டு வைத்தால் (விதி அமைப்பு, 5 ஐ பார்க்கவும்), உங்களின் முற்பாதுகாப்பு சேமிப்பு நிதி நிலையத்தில் இருந்து (உதாரணத்திற்கு பென்சியோன் பண நிலையம்) அல்லது வங்கியிலோ அல்லது காப்புறுதி தாபனங்களிடமோ செய்து கொண்ட ஒப்பந்தப்படி (ஒரு பகுதி) தொழில் ஓய்வு நிதி அல்லது சேமிப்பு மூலதனம் வழங்கப்படும்:

- தொழில் ஓய்வூதிய வயதில்
- சுவிட்சர்லாந்து சட்ட விதிக்கமைய அங்கவீனம் ஏற்பட்டால்
- நீங்கள் மரணமானால், உங்களினுடைய வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவி அல்லது உங்கள் பிள்ளைகள், அதற்கான தகுதியினை நிறைவேற்றும் தருணங்களில்

### ஒரே தரத்தில் தொழில் ஓய்வு நிதித் தொகையினை பெற்றுக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?

**நீங்கள் கட்டாயமாக உங்களின் தொழில் ஓய்வு பண காப்புறுதி நிதிக்கு நீங்களாகவே தொடர்பு கொள்ள வேண்டும். உங்களது ஓய்வூதிய நிதி நிலையமோ, அல்லது காப்புறுதித் தாபனமோ, அல்லது வங்கியோ தானாகவே இதனை செய்ய மாட்டாது..**

நீங்கள் கட்டாயமாக உங்களின் தொழில் ஓய்வு பண காப்புறுதி நிதிகளினை பெற்றுக் கொள்ள உங்களினுடைய முற்பாதுகாப்பு சேமிப்பு நிதி நிலையத்துடனோ அல்லது காப்புறுதி தாபனத்துடனோ, அல்லது வங்கியுடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

# D இணைப்பு



# முக்கியமான முகவரிகள்

AHV/IV பற்றிய முகவரிகள், விளக்கப் பத்திரங்கள் மற்றும் படிவங்களைப் பின்வரும் இணையத்தளத்தில் www.ahv-iv.ch.

**Ausgleichskassen:**
ஓய்வூதிய நிதிநிலையங்கள்: ஓய்வூதிய நிதிநிலையங்களின் முகவரிகளை பின்வரும் தளத்தில் காணலாம் www.ahv-iv.ch

**சுவிஸ் நாட்டு ஓய்வூதிய நிதிநிலையங்கள் (SAK)**
**Schweizerische Ausgleichskasse (SAK)**
Postfach 3100, 1211 Genf 2
022 795 91 11
cc27@zas.admin.ch
www.zas.admin.ch

**வெளிநாட்டில் வசிக்கும் வலது குறைந்தவர்களுக்கான காப்புறுதி நிலையம்**
**IV-Stelle für Versicherte im Ausland**
Postfach 3100, 1211 Genf 2
022 795 91 11
cc27@zas.admin.ch
www.zas.admin.ch

**மத்திய ஓய்வூதிய நடுநிலையம்**
**Zentralstelle 2. Säule**
**Sicherheitsfonds BVG**
Postfach 1023, 3000 Bern 14
031 380 79 75
info@zentralstelle.ch
www.zentralstelle.ch

**சமூகக் காப்புறுதிக்கான மத்திய அமைச்சு (BSV)**
**Bundesamt für**
**Sozialversicherungen (BSV)**
Effingerstrasse 20, 3003 Bern
058 462 90 11
info@bsv.admin.ch
www.bsv.admin.ch

**கூட்டுறவு சேமிப்பு நிலையம்:**
**Stiftung Auffangeinrichtung BVG**
**Administration Freizügigkeitskonten**
Postfach, 8036 Zürich
D 041 799 75 75
F 021 340 63 33
I 091 610 24 24
fzk@chaeis.ch
www.aeis.ch

விசேடமாகச் செலுத்துவது பற்றிய வினாக்களுக்கு:
**Für Fragen betr. Sonderabgabe:**
**Staatssekretariat für Migration (SEM)**
**குடிவரவாளர்களுக்கான அரச செயலர் (SEM)**
**OSP AG**
Quellenweg 6, 3003 Bern-Wabern
058 463 36 39

தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்ல இருப்பவர்களுக்கான ஆலோசனை நிலையங்கள்:
**Rückkehrberatungsstellen:**
இவைகளிற்கான முகவரிகளை வெளிநாட்டவர்களுக்கான பாதுகாவலர் நிலையங்கள் அல்லது மாநில குடிவரவாளர் சேவைகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

# சுவிசை விட்டு
# அதன் பின்பும் பெற

I

**AHV/IV இல் இருந்து**

| | | |
|---|---|---|
| | ஒரு சமூகமுறற்பாதுகாப்புநிதி ஒப்பந்தம் தாய்நாட்டுடன் செய்யப்பட்டுள்ளது (பகுதி 7a மற்றும் 11) | ஒரு சமூகமுறற்பாதுகாப்புநிதி ஒப்பந்தம் தாய்நாட்டுடன் செய்யப்படவில்லை (பகுதி 7b) |
| நாட்டைவிட்டு வெளியேறும் போது உரிமைகள் | திரும்பப் பெறுதல்முடியாது (விதிவிலக்காக அவுஸ்திரேலியா, சிலி, சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், தென் கொரியா மற்றும் உருகுவே) | **AHV ற்குச் செலுத்திய பணத்தைப் பெறலாம்** |
| வயோதிபம், ஊனம் மற்றும் இறப்பில் உரிமைகள் | **ஓய்வூதியம் அல்லது ஒருமுறையான கொடுப்பனவு** | காப்புறுதிப் பாதுகாப்பு இல்லாவிட்டால்: எவ்வித கொடுப்பனவும் கிடையாது. |

# வெளியேறும் போதும் இயலுமான உரிமைகள்

II

**தொழில் ஓய்வூதிய நிதியிலிருந்து**

முற்பாதுகாப்பு விரும்பப்படவில்லை (பகுதி 8a)

முற்பாதுகாப்பு உள்ளது (பகுதி 8a மற்றும் 12)

**வெளியேறும்போது பணத்தைக் கையில் பெறல்**

வெளியேறும் போது பணம் பெறமுடியாது

முற்பாதுகாப்பும் சேவைகளும் இல்லை

**மாதாந்த வயோதிபப்பணம் அல்லது முழுவதுமாகப் பெறுதல்**

# விளக்க விபரணம்

## AHV/IV (Alters- und Hinterlassenenversicherung/Invalidenversicherung) – Assurance-Vieillesse et Survivants/ Assurance-Invalidité):

வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான,வலது குறைந்தவர்க்கான நிதி

சுவிச்சர்லாந்து நாட்டில் நடைமுறையிலுள்ள, அரச சமூக அத்தியாவசிய காப்புறுதியினுடைய கட்டாயத்தினையும், பிற்காலங்களில் கிடைக்க இருக்கும் காப்புறுதியின் நன்மைகள்.

## AHV-Versicherungsnummer – Numéro d’assuré AVS

வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான,வலது குறைந்தவர்க்கான காப்புறுதி இலக்கம்

இந்தக் காப்புறுதி இலக்கம், காப்புறுதி நிலையத்தில் உங்கள் பற்றிய விபரங்களை அடையாளப்படுத்த உதவும். இதை நீங்கள் உங்கள் மருத்துவக் காப்புறுதி அட்டையில் காணலாம்.

## Auffangeinrichtung – Institution supplétive)

சேமிப்பு நிலையம்

இது ஒரு விசேடமாக இயங்கும் சேமிப்பு பாதுகாப்பு நிலையமாகும்.

நீங்கள் உங்களின் வேலையை விட்டு விலகி, இரண்டு வருடத்தினுள் தொழில் வழங்கும் தாபனத்தின் காப்புறுதி நிலையத்திற்கு முழு சேமிப்பு மூலதனமான நிதியினை என்ன செய்வது என அறிவிக்காதுவிட்டால் உங்களிற்கான சேமிப்பு நிலையத்தினர் இந்த விசேட சேமிப்பு நிலையத்திற்கு அதை அனுப்புவார்கள். அதே நேரம் உங்களிற்கான பாதுகாப்பு காப்புறுதி செல்லுபடியானதாக இருக்கும்.

## Ausgleichskassen – Caisses de compensation

ஓய்வூதிய நிதி நிலையங்கள்

இந்த நிலையங்கள் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான,வலது குறைந்தவர்க்கான (AHV/IV) காப்புறுதி கட்டண நிதி விபரங்களினை நடைமுறைப்படுத்தும் இடங்களாகும். இவர்களே காப்புறுதி கட்டண பணத்தினை அறவிட்டு, கணக்கு விபரங்களை வரவிட்டு பின்பு ஓய்வு நிதியினை வழங்குபவர்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்களிற்கு என தனியான ஓய்வூதிய நிதி நிலையங்கள் உள்ளன, அதைவிட மேலும் பலவிதமான சங்கங்களுக்கும் ஓய்வூதிய நிதி நிலையங்கள் உள்ளன. இதற்கான முகவரிகளை www.ahv-iv.ch எனும் இணையத்தளத்தில் காணலாம்.

## Austrittsleistung – Prestation de sortie

முழு சேமிப்பு மூலதனமான நிதி

நீங்கள் தொழிலை விட்டு வேறு தாபனத்திற்கு மாறும் போது அல்லது வேலையை விட்டு நிரந்தரமாக விலகும் போது (இதுவரை காலமும் சேகரித்த முழு ஓய்வூதிய நிதி அல்லது பென்சன் கிடைக்கின்ற வயதில் கிடைக்கப்போகும் தொகை) ஓய்வூதிய நிலையம் உங்களிற்கு வழங்கும் தொகை ஆகும். நீங்கள் வேறு வேலைக்கு மாறும் போது, சேகரித்த முழு ஓய்வூதிய நிதியினையும் புதிய ஓய்வூதிய நிலையத்திற்கு மாற்றப்படும். இவ் காப்புறுதி பணம் குறிப்பிட்ட நிபந்தனையின் மட்டுமே காசாக கையளிக்கப்படும், உதாரணத்திற்கு நீங்கள் நிரந்தரமாக சுவிச்சர்லாந்து நாட்டை விட்டு வெளியேறும் தருணத்தில் மட்டும். இதுவரை சேகரித்த முழு சேமிப்பு மூலதனமான நிதியினை எடுத்து பெற்று கொள்வதற்கு விண்ணப்பம் செய்யலாம்.

## Berufliche Vorsorge (2. Säule) – Prévoyance professionelle (2ème pilier)

### தொழில் ஓய்வூதிய நிதி

தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதியும் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான (AHV/IV) காப்புறுதியும் ஒரே வகையான பாதுகாப்புகளுக்காக ஏற்படுத்தப்பட்டன. இவ் தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதி வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான (AHV/IV) காப்புறுதிக்கு உறுதுணையாக இருக்கின்றது. நீங்கள் வேலை செய்து, ஆகக்குறைந்த தொகையான 21,150 பிறாங்குகளுக்கு (01.01.2018 நிலைப்பாட்டின்படி) மேலாக சம்பாதிப்பவர்களாக இருந்தால் மட்டும் கட்டாயமாக காப்புறுதி செய்யப்பட்டிருப்பீர்கள்.

## Freizügigkeitskonto – Compte de libre passage

### விசேடமான ஒரு சேமிப்பு கணக்கு

ஓய்வு பெறும் வயதிற்கு முதலே, தொழில் ஓய்வு பணம் கிடைக்கும் பட்சத்தில், உங்களின் முழு சேமிப்பு மூலதனத்தினை, வங்கி ஒன்றில் விசேடமான ஒரு கணக்கு இலக்கத்தில் சேமித்து வைக்க என ஆரம்பிக்கப்படும் ஒரு கட்டுப்பாடுள்ள வங்கிக் கணக்கு.

## Freizügigkeitspolice – Police de libre passage

### விசேடமான சேமிப்பு காப்புறுதி பத்திரம்

ஓய்வு பெறும் வயதிற்கு முதலே, தொழில் ஓய்வு பணம் கிடைக்கும் பட்சத்தில், உங்களின் முழு சேமிப்பு மூலதனத்தினை, காப்புறுதி தாபனம் ஒன்றில் விசேடமான ஒரு இலக்கத்தில் சேமித்து வைக்க என ஆரம்பிக்கப்படும் ஒரு கட்டுப்பாடுள்ள காப்புறுதி கணக்குஅத்தாட்சிப் பத்திரம்.

## Hinterlassene – Survivants

### பின்தங்கியிருப்பவர்கள்

நீங்கள் மரணமானால் இவர்களே உங்கள் குடும்ப உறுப்பினர்கள் எனக் கருதப்படுவார்கள் (வாழ்க்கை துணைவர் அல்லது வாழ்க்கை துணைவி அத்துடன் 18 வயதுக்கு உட்பட்ட உங்கள் பிள்ளைகள் மற்றும் தொழிற்கல்வி பயிலும் 25 வயது வரையான உங்கள் பிள்ளைகள்).

## Individuelles AHV/IV-Konto (IK) – Compte individuel AVS/AI(CI)

### தனிப்பட்ட காப்புறுதி நிதி சேமிப்புக் கணக்கு

ஓய்வூதிய நிதி நிலையங்கள் ஒவ்வொரு காப்புறுதி செய்த நபர்களிற்கு என ஆரம்பித்து உள்ள கணக்கினை இவ்வாறு அழைக்கப்படுகின்றது. நீங்கள் பல தாபனங்களில் வேலை செய்து இருக்கும் பட்சத்தில், உங்களிற்கு என பல ஓய்வூதிய நிதி நிலையங்களில் உங்கள் பெயரில் பல கணக்கு இலக்கங்கள் இருக்கலாம்.

## Invalidität – Invalidité

### வலதுகுறைதல்

ஒரு நபர் நோய் காரணமாகவோ அல்லது ஒரு விபத்து காரணமாகவோ அதிக நாட்களுக்கு தொடர்ந்து தொழில் செய்ய முடியாத நிலையில் வலதுகுறைந்த நிலை ஏற்படும்.

## Leistungen – Prestations

### வருமதி

காப்புறுதி செய்யப்பட்ட நபருக்கு, காப்புறுதி தாபனத்திடமிருந்து கிடைக்கப் பெறும் அனைத்து வரவுப்பணங்கள் இவ்வாறு சொல்லப்படும். இவ் வருவாய் மாதாந்தம் ஒழுங்காக கிடைக்குமாயின் அவை சாதாரணமாக கிடைக்கும் ஒரு ஓய்வூதிய நிதி (பென்சன் காசு) ஆகும். அதனைவிட ஒரே தரத்தில் கிடைக்கப்பெறும் வருமதி (உதாரணத்திற்கு

வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான,வலது குறைந்தவர்க்கான AHV செலுத்திய கட்டண பணத்தினை திருப்பி வழங்குதல்) ஆனால் அதற்கு பிற்பாடு காப்புறுதி தாபனத்திடமிருந்து ஒரு வருமதியும் திருப்பி வழங்கப்படமாட்டாது.

## Pensionierung – Retraite ஓய்வு பெறுதல்

## Rentenalter – Age de la retraite

**ஓய்வூதிய வயது**

இந்த வயதில் சாதாரணமாக ஒரு தொழிலாளர் வேலையை விட்டு நிரந்தரமாக விலகி தொழில் ஓய்வூதிய பணம் கிடைக்க தகுதியுள்ளவர். வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, வலது குறைந்தவர்க்கான (AHV/IV – AVS/AI) காப்புறுதியில் வயது எல்லையில் பெண்கள் 64 வயது, ஆண்கள் 65 வயது. தொழில் ஓய்வூதிய காப்புறுதியினை பொறுத்தமட்டில், காப்புறுதி தாபனத்தின் நிபந்தனை விதிகளினை பொறுத்து வயது எல்லை குறைவாகவும் இருக்கலாம்.

## Rückvergütung der einbezahlten AHV-Beiträge – Remboursement des cotisations AVS payées)

**வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, செலுத்திய காப்புறுதி கட்டணத்தினை திரும்ப கேட்டல்**

வெளிநாட்டு நபர் ஒருவர், நிரந்தரமாக சுவிச்சர்லாந்து நாட்டை விட்டு வெளியேறும் தருணத்தில், அவரின் தாய் நாட்டுடன் சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை ஒப்பந்த விதி இல்லாத பட்சத்தில் மட்டுமே வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான, செலுத்திய காப்புறுதி கட்டணத்தினை திரும்ப கேட்கச் சந்தர்ப்பம் உள்ளது (விதிவிலக்காக அவுஸ்திரேலியா, சிலி, சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், தென் கொரியா மற்றும் உருகுவே).

## Schweizerische Ausgleichskasse SAK – Caisse suisse de compensation CSC):

**சுவிச்சர்லாந்திற்கான ஓய்வூதிய நிதி நிலையங்கள்**

இந்த நிலையங்கள் வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான,வலது குறைந்தவர்க்கான காப்புறுதி நிதி நிலையங்களைப் போன்று இயங்குகின்றது. இந்த நிலையம், வெளிநாட்டில் வசிக்கின்ற வயோதிபகால, தாரமிழந்தவர்க்கான,வலது குறைந்தவர்க்கான AHV/IV – AVS/AI காப்புறுதி செய்திருந்த அனைவருக்கும் பொறுப்பாக இருக்கும்.

## Sozialversicherungsabkommen – Convention de sécurité sociale

**சமூக காப்புறுதி நிதி வழங்கும் உடன்படிக்கை ஒப்பந்தம்**

ஒவ்வொரு நாடுகளும், தமது நாட்டு மக்களுக்கான சமூக சேவை காப்புறுதி நிதி கடமை ஒழுங்கினை நிறைவு செய்ய மற்ற நாடுகளுடன் சேர்ந்து ஒத்துழைக்கின்ற ஒரு சட்ட சர்வதேச நாட்டு உடன்படிக்கை ஒப்பந்தம்.

## Versicherungsfall – Cas d'assurance

**காப்புறுதி நிதிபெறும் நிலை ஆரம்பித்தல்**

ஒரு நபர், ஓய்வூதிய வயதை அடைந்தாலோ அல்லது வலதுகுறைந்தவர் ஆனாலோ அல்லது மரணமடைந்தாலோ, ஒரு காப்புறுதி நிலை ஆரம்பித்தலாக கருதப்பட்டு, அதனால் அவர்களிற்கு காப்புறுதி சேமிப்பு நிதி வரவுகளை செலுத்த தகுதியுள்ள தருணமாக கருதப்படும்.

## Vorsorgeschutz (in der 2. Säule) Protection en matière de prévoyance professionnelle (2ème pilier)

முற்பாதுகாப்பு காப்புறுதி (2ம் தூணில்)

தொழில் ஓய்வூதிய பணம் கிடைக்க நீங்கள் அத் தகுதியினை நிறைவேற்றும் பட்சத்தில் (↗ தொழில்

முற்பாதுகாப்பு), அப்படியான காப்புறுதி தருணம் வரும் பட்சத்தில், காப்புறுதி நிதி நிலையத்தில் காப்புறுதி செய்யப்பட்டபடியினால், காப்புறுதி வருமதியினை பெறுவீர்கள். அவ்வாறு தொடர்ந்தும் நல்ல காப்புறுதி பாதுகாப்புக்கு அமுலில் இருக்க விட்டு வைத்தால், நீங்கள் செலுத்திய நிதி மூலதனத்தினை, நீங்கள் காப்புறுதியினை விட்டு விலகும் போது குறிப்பிட்ட நிபந்தனையின் அடிப்படையில் மட்டுமே இவ் மூலதனம் திருப்பி வழங்கப்படும் (உதாரணத்திற்கு நிரந்தரமாக சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு வெளியேறும் தருணத்தில்).

### Vorsorgeeinrichtung, zum Beispiel Pensionskassen – Institution de prévoyance, par exemple caisse de pensions

முற்பாதுகாப்பு சேமிப்பு நிதி நிலையம், உதாரணமாக ஓய்வூதிய நிதியகம்


முற்பாதுகாப்பு சேமிப்பு நிலையம் என அழைக்கப்படுவது, தொழில் ஓய்வூதிய காப்புறுதி நிதி தாபனங்களினால் செலுத்தப்படும் கட்டணங்களினை வரவு வைத்து, பென்சியோன் பணத்தினை கணிக்கும் நிலையங்கள் ஆகும். இவைகள் தொழில் ஓய்வூதிய நிதி தாபனங்களாகவோ அல்லது காப்புறுதி தாபனங்களாகவோ அல்லது வங்கிகளாகவோ இருக்கலாம். இச்சேமிப்பு நிலையம், செலுத்தப்படும் கட்டணங்களினை வரவு வைத்து பென்சன் பணத்தின் அளவினை கணித்து தொழில் ஓய்வூதிய பணத்தினை வழங்கும். உங்களின் அனைத்து சேமிப்பு மூலதனநிதிகளும், கட்டாயமாக தொடர்ந்தும் இப் பாதுகாப்பு சேமிப்பு நிலையத்தில் மட்டுமே சேமிப்பு வைப்பில் இருக்க வேண்டும்.

# பதிப்புரிமை பெற்றது


வெளியீடு 2018

**வெளியிடுபவர்:** குடிவரவாளர்களுக்கான அரச செயலர் (SEM), சமூகக் காப்புறுதிக்கான மத்திய அமைச்சுடன் ஒன்றிணைந்த செயற்பாடாக **வடிவமைப்பு:** typisch.ch **பிரதியாக்கம்:** tomz.ch

**தொடர்பு:** குடிவரவாளர்களுக்கான அரச செயலர், Quellenweg 6, 3003 Bern-Wabern, தொலைபேசி 058 465 11 11, info@sem.admin.ch | சமூகக் காப்புறுதிக்கான மத்திய அமைச்சு, Effingerstrasse 20, 3003 Bern, தொலைபேசி 058 462 90 11, தொலைநகல் 058 462 78 80, info@bsv.admin.ch **நிறுவனம்:** BBL, Verkauf Bundespublikationen, CH-3003 Bern, www.bundespublikationen.admin.ch | Art.-Nr. 420.001.tam




Albanisch, albanais, albanese
Arabisch, arabe, arabo
Deutsch, allemand, tedesco
Englisch, anglais, inglese
Französisch, français, francese
Italienisch, italien, italiano

Portugiesisch, portugais, portoghese
Russisch, russe, russo
Serbisch, serbe, serbo
Spanisch, espagnol, spagnolo
■ **Tamilisch, tamoul, tamil**
Türkisch, turc, turco